முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2024-02-17
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் அரிதானதன்மை (scarcity) என்ற எண்ணக்கருவை சரியாக விபரிப்பது எது?

(1) அரிதானதன்மை என்பது பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான வளங்களின் மாற்றுப் பயன்பாடு ஆகும்.

(2) அரிதானதன்மை என்பது வரையறையற்ற மனித விருப்பங்களுடன் தொடர்புடைய வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு ஆகும்.

(3) அரிதானதன்மை என்பது பொருளொன்றை நுகரும் ஒரு நபருக்குக் கிடைக்கின்ற மொத்த திருப்தி ஆகும்.

(4) அரிதானதன்மை என்பது சமமான திருப்தியை அளிக்கின்ற இரண்டு பொருள்களின் வேறுபட்ட கலவை ஆகும்.

**1.2** கீழ்வருவனவற்றுள் பேரினப் பொருளாதாரத்தில் (macro-economics) **உள்ளடக்கப்படாத** பகுதி எது?

(1) விலை மட்டம் (2) பொருளாதார வளர்ச்சி

(3) திரண்ட வெளியீடு (4) சந்தையில் நுகர்வோரின் நடத்தை.

**1.3** "நிரம்பல் மாற்றம்" தொடர்பில் கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று எது?


(1) பொருளின் விலை மாற்றமடைவதுடன் நிரம்பலின் ஏனைய காரணிகள் மாறாது உள்ளன.

(2) பொருளின் விலை மாற்றமடைவதுடன் நிரம்பலின் ஏனைய காரணிகளும் மாற்றமடைகின்றன.

(3) பொருளின் விலை மாறாது இருப்பதுடன் நிரம்பலின் ஏனைய காரணிகள் மாறுகின்றன.

(4) பொருளின் விலை மாறாது இருப்பதுடன் நிரம்பலின் ஏனைய காரணிகளும் மாறாது உள்ளன.

**1.4** கீழ்வரும் வரைபடம் ஒரு நாட்டின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது :




மேற்படி வளையியில் உள்ள புள்ளி $x$ குறிப்பது :

(1) முழு வேலை (2) வளங்களின் குறைவான பயன்பாடு

(3) பொருளாதார வளர்ச்சி (4) வேலையின்மை.

**1.5** கீழ்வரும் கூற்றுகளைக் கருதுக :

**(a)** ஒரு நபர் பெறுகின்ற பயன்பாட்டு மட்டங்களை ஒப்பிடுவது சாத்தியமில்லை என்று ஒப்புமையான (Ordinal) பயன்பாட்டுக் கோட்பாடு கருதுகிறது.

**(b)** அளத்தகு (Cardinal) பயன்பாட்டுக் கோட்பாட்டிற்கு இணங்க, திருப்தி என்பது அளவிட முடியாததாகும்.

**(c)** எல்லைப் பயன்பாடு என்பது பொருளொன்றின் மேலதிக அலகொன்றை நுகர்வதன் மூலம் நபர் ஒருவர் பெறுகின்ற மேலதிக திருப்தி ஆகும்.

மேலுள்ளவற்றுள், பயன்பாட்டுக் கோட்பாடு தொடர்பான சரியான கூற்று /கூற்றுகள் :

(1) **(a)** மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(c)** மாத்திரம் (4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.6** பொருள் ஒன்றின் விலை ரூபா 12/- இலிருந்து ரூபா 10/- ஆகக் குறைவடையும்போது, அந்தப் பொருளின் கேள்விக் கணியம் 900 அலகுகளிலிருந்து 1,000 அலகுகளாக அதிகரிக்கிறது. பொருளின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி (Price Elasticity of Demand):


(1) நெகிழ்ச்சியற்றது (2) நெகிழ்ச்சியானது (3) அலகு நெகிழ்ச்சி (4) பூரண நெகிழ்ச்சி.

**1.7** 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தலா வருமானம் :

(1) 2,000 அமெரிக்க டொலர் (2) 3,474 அமெரிக்க டொலர்.

(3) 2,600 அமெரிக்க டொலர். (4) 5,574 அமெரிக்க டொலர்.

**1.8** **பொருள் X** தொடர்பான கீழ்வரும் வரைபு உங்களுக்குத் தரப்பட்டுள்ளது :




நுகர்வோர் மிகை :

(1) ரூபா 1,250/-. (2) ரூபா 500/-. (3) ரூபா 1,750/-. (4) ரூபா 750/-.

**1.9** கீழ்வருவனவற்றுள் நிறைபோட்டி நிறுவனமொன்று தொடர்பில் சரியான கூற்று எது?

(1) விலையானது சராசரிக் கிரயத்தைவிட அதிகமாக இருப்பின், நிறுவனம் சாதாரண இலாபத்தை உழைக்கும்.

(2) விலையானது சராசரிக் கிரயத்தைவிட குறைவாக இருப்பின், நிறுவனம் சாதாரண இலாபத்தை உழைக்கும்.

(3) விலையானது சராசரிக் கிரயத்திற்குச் சமமாக இருப்பின், நிறுவனம் சாதாரண இலாபத்தை உழைக்கும்.

(4) விலையானது சராசரிக் கிரயத்திற்குச் சமமாக இருப்பின், நிறுவனம் அசாதாரண இலாபத்தை உழைக்கும்.

**1.10** கீழ்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் ஒரு தரம்சார் கருவியாக (qualitative instrument) இருப்பது எது?

(1) வங்கி வீதம்.

(2) கடன் உத்தரவாதங்களுக்கான எல்லைகளை அமைத்தல்

(3) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்.

(4) ஒதுக்க வீதம்.

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ................. *(ஒரு நிறைபோட்டி / ஒரு தனியுரிமை)* நிறுவனம் சந்தையில் விலை நிர்ணயிப்பாளராகத் தொழிற்படுகிறது.

**1.12** வெளியீட்டின் விகிதாசார அதிகரிப்பை விட உள்ளீட்டின் விகிதாசார அதிகரிப்பு குறைவாக இருக்கும்போது அங்கு ................. *(அதிகரித்துச் செல்கின்ற/ குறைவடைந்து செல்கின்ற)* அளவுத்திட்ட விளைவுகள் காணப்படும்.

*கீழே **1.13** மற்றும் **1.14** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.13** உற்பத்தியாளர்கள் மீது அரசாங்கம் ஓர் அலகு வரியை விதித்தால் அது நிரம்பல் வளையியை வலப்பக்கமாக நகர்த்தும்.

**1.14** உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து உள்ளீட்டுக் காரணிகளும் நீண்ட கால ஓட்டத்தில் மாறிகள் ஆகும்.

**1.15** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** “பொருளாதார வளர்ச்சி” என்னும் பதத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.16** தனியுரிமைப் போட்டிச் சந்தையொன்றின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.17** வர்த்தக வங்கியொன்றின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) குறிப்பிடுக.

**1.18** “நிரம்பல் விதி (Law of supply)” இனைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.20** ஒரு பொருளாதார அபிவிருத்தியின்போது ஏற்படுகின்ற இரண்டு (02) தரம்சார் மாற்றங்களை (qualitative changes) அடையாளம் காண்க.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) உற்பத்திக் காரணிகள் (பொருளாதார வளங்கள்) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகின்ற இரண்டு (02) சந்தர்ப்பங்களை (instances) **அடையாளம் காண்க.** (02 புள்ளிகள்)

(c) பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) பொருளொன்றின் கீழ்வரும் கேள்வி ($Q_d$) மற்றும் நிரம்பல் ($Q_s$) சார்புகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

$$Qd = 200 - 3p$$

$$Qs = -100 + 2p$$

**நீங்கள் செய்யவேண்டியது :**

பொருளுக்கான சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) குறுங்கால ஓட்டத்திலுள்ள உற்பத்திச் செயன்முறையின் கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| நிலையான காரணி காணி (ஏக்கர்) | மாறும் காரணி (கூலி) | மொத்த உற்பத்தி (TP) (அலகுகள்) |
|---|---|---|
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 8 |
| 1 | 2 | 18 |
| 1 | 3 | 33 |
| 1 | 4 | 36 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி, சராசரி உற்பத்தி (AP) மற்றும் எல்லை உற்பத்தி (MP) ஆகியவற்றை அலகுகளில் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) குறுங்கால ஓட்டத்தில் மொத்த உற்பத்தி (TP), சராசரி உற்பத்தி (AP), எல்லை உற்பத்தி (MP) ஆகியவற்றின் நடத்தைகளை (behavior) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) பணத்திற்கான கேள்வியைப் பாதிக்கின்ற மூன்று (03) பேரினப் பொருளாதார மாறிகளை **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(b) விலை மட்டத்திற்கும் வட்டி வீதத்திற்குமிடையிலான தொடர்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) பணவீக்கத்திற்கான காரணங்கள் இரண்டை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தகத் தடைகளின் தாக்கங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(b) ஒரு நாட்டின் நாணயத் தேய்வின் மூன்று (03) பிரதிகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) ஆஜென்ரீனா மற்றும் சீனா ஆகிய நாடுகள் சோளம் மற்றும் அரிசி ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்கின்றன. அவ்விரு நாடுகளினதும் ஓர் அலகுக் கூலியினால் உற்பத்தி செய்யக்கூடிய சோளம் மற்றும் அரிசி அலகுகளை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| நாடு | சோளம் (கிலோகிராம்) | அரிசி (கிலோகிராம்) |
|---|---|---|
| ஆஜென்ரீனா | 24 | 12 |
| சீனா | 4 | 8 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கும் நாடு எதுவென **விபரிக்குக.** *(உங்களது விடைகளுக்கு ஆதரவான கணிப்பீடுகளையும் தருக).* (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) (a) தேசிய வருமானக் கணக்குகளின் மூன்று (03) வரையறைகளை (limitations) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) தேசிய வருமானக் கணக்குகளில் உள்ள “கொள்வனவாளர்களின் விலை” என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | ரூபா மில்லியன் |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 2,000 |
| அரசாங்கத்தின் நுகர்வுச் செலவினம் | 6,500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் | 2,500 |
| இருப்பு மாற்றங்கள் | 2,700 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி | 7,600 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி | 9,900 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 500 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) மொத்த உள்நாட்டு செலவினம் (GDE) – சந்தை விலையில். (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(C) இலங்கையிலுள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு, சமீபத்திய அரசாங்கத்தின் வரிகள் ஏற்படுத்திய தாக்கங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |